ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திரிபுரம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திரிபுரம் ॥

## திருவட்டபுயகரம்

‡திரிபுரம் மூன்றெரித்தானும்⋆ மற்றை
மலர்மிசை மேல் அயனும் வியப்ப⋆
முரிதிரை மா கடல் போல் முழங்கி⋆
மூவுலகும் முறையால் வணங்க⋆
எரியன கேசர வாள் எயிற்றோடு⋆
இரணியன் ஆகம் இரண்டு கூறா⋆
அரியுருவாம் இவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (1)

வெம் திறல் வீரரில் வீரர் ஒப்பார்⋆
வேதம் உரைத்திமையோர் வணங்கும்⋆
செந் தமிழ் பாடுவார் தாம் வணங்கும்⋆
தேவர் இவர்கொல் தெரிக்க மாட்டேன்⋆
வந்து குறள் உருவாய் நிமிர்ந்து⋆
மாவலி வேள்வியில் மண் அளந்த⋆
அந்தணர் போன்றிவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (2)

செம் பொன் இலங்கு வலங்கை வாளி⋆
திண் சிலை தண்டொடு சங்கம் ஒள் வாள்⋆
உம்பர் இரு சுடர் ஆழியோடு⋆
கேடகம் ஒண் மலர் பற்றி எற்றே⋆
வெம்பு சினத்தடல் வேழம் வீழ⋆
வெண் மருப்பொன்று பறித்து⋆ இருண்ட
அம்புதம் போன்றிவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (3)

மஞ்சுயர் மா மணிக் குன்றம் ஏந்தி⋆
 மா மழை காத்தொரு மாய ஆனை
அஞ்ச⋆ அதன் மருப்பொன்று வாங்கும்⋆
 ஆயர்கொல் மாயம் அறிய மாட்டேன்⋆
வெஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி⋆
 வேதம் முன் ஓதுவர் நீதி வானத்து⋆
அஞ்சுடர் போன்றிவர் ஆர்கொல் என்ன⋆
 அட்டபுயகரத்தேன் என்றாரே (4)

கலைகளும் வேதமும் நீதி நூலும்⋆
 கற்பமும் சொல் பொருள் தானும்⋆ மற்றை
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும்⋆
 நீர்மையினால் அருள் செய்து⋆
நீண்ட மலைகளும் மா மணியும்⋆ மலர்மேல்
 மங்கையும் சங்கமும் தங்குகின்ற⋆
அலை கடல் போன்றிவர் ஆர்கொல் என்ன⋆
 அட்டபுயகரத்தேன் என்றாரே (5)

எங்ஙனும் நாம் இவர் வண்ணம் எண்ணில்⋆
 ஏதும் அறிகிலம் ஏந்திழையார்⋆
சங்கும் மனமும் நிறைவும் எல்லாம்⋆
 தம்மன ஆகப் புகுந்து⋆ தாமும்
பொங்கு கருங்கடல் பூவை காயாப்⋆
 போதவிழ் நீலம் புனைந்த மேகம்⋆
அங்ஙனம் போன்றிவர் ஆர்கொல் என்ன⋆
 அட்டபுயகரத்தேன் என்றாரே (6)

முழுசி வண்டாடிய தண் துழாயின்⋆
 மொய்ம் மலர்க் கண்ணியும் மேனியம்⋆ சாந்-
திழிசிய கோலம் இருந்தவாறும்⋆
 எங்ஙனஞ்சொல்லுகேன்! ஓவி நல்லார்⋆
எழுதிய தாமரை அன்ன கண்ணும்⋆
 ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும்⋆

அழகியதாம் இவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (7)

மேவி எப்பாலும் விண்ணோர் வணங்க⋆
வேதம் உரைப்பர் முந்நீர் மடந்தை
தேவி⋆ அப்பால் அதிர் சங்கம் இப்பால்
சக்கரம்⋆ மற்றிவர் வண்ணம் எண்ணில்⋆
காவி ஒப்பார் கடலேயும் ஒப்பார்⋆
கண்ணும் வடிவும் நெடியராய்⋆ என்
ஆவி ஒப்பார் இவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (8)

தஞ்சம் இவர்க்கென் வளையும் நில்லா⋆
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு⋆
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி⋆
வாய் திறந்தொன்று பணித்ததுண்டு⋆
நஞ்சம் உடைத்திவர் நோக்கும் நோக்கம்⋆
நான் இவர் தம்மை அறியமாட்டேன்⋆
அஞ்சுவன் மற்றிவர் ஆர்கொல் என்ன⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே (9)

‡மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்⋆
நீள் முடி மாலை வயிரமேகன்⋆
தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி⋆
அட்டபுயகரத்தாதி தன்னை⋆
கன்னி நல் மா மதிள் மங்கை வேந்தன்⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆ குன்றா
இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை⋆
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖